**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 503** **நாள்: 23.09.2026**

**அடையாறு முகத்துவாரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, அடையாறு முகத்துவாரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், இன்று (23.09.2026) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., நீர்வளத்துறை செயற்பொறியாளர் திரு.ஜி.ஆர்.இராதாகிருஷ்ணா, மண்டல அலுவலர் திரு.என்.காளிதாஸ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**இதனைத் தொடர்ந்து, வடகிழக்குப் பருமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது:**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 1,683 கி.மீ. நீளத்திலான மழைநீர் வடிகால்களில் வண்டல்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 1,102 கி.மீ. நீளத்தில் உள்ள மழைநீர் வடிகால்கள் தூர்வாரப்பட்டுள்ளது. இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1,10,211 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் வண்டல்கள் தூர்வாரும் பணிகள் முதற்கட்டமாக முழுவதும் முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்டமாக இதுவரை 65,076 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், 922 மீ. நீளத்தில் 105 விடுபட்ட இடங்களில் மழைநீர் வடிகால் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 37 இடங்களில் முடிக்கப்பட்டுள்ளது. 68 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாநகராட்சியின் சார்பில் பராமரிக்கப்படும் 44 நீர்வழிக்கால்வாய்கள், நீர்வளத்துறையின் சார்பில் பராமரிக்கப்படும் 13 கால்வாய்கள் மற்றும் கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் உள்ளிட்ட ஆறுகளில் மழைநீர் சீராகச் செல்லும் வகையில் ஆகாயத்தாமரைகளை அகற்றி வண்டல் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 28 இரயில்வே சிறு பாலங்களின் உள்ள கால்வாய்களில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 6 கால்வாய்களில் தூர்வாரப்பட்டுள்ளது.

கேப்டன் காட்டன், செகரடரியேட் காலனி கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் கால்வாய்களில் 8,439 மீ. நீளத்தில் மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 6,977 மீ. நீளத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 83 குளங்களில் மேம்பாட்டுப் பணிகள்

எடுத்துக் கொள்ளப்பட்டு, 51 குளங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளது. 32 குளங்களில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாநகராட்சியின் 19 சுரங்கப்பாதைகள், நெடுஞ்சாலைத்துறையின் 5 சுரங்கப்பாதைகளில் மழையினால் தேங்கும் நீரினை உடனடியாக வெளியேற்றும் வகையில் மோட்டார் பம்புகள் நிறுவப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

109 மோட்டார் பம்புடன் கூடிய நீர் சேகரிப்புத் தொட்டிகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், 3 நீர் சேகரிப்புத் தொட்டிகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிக்கப்படும். மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் மழைநீரை வெளியேற்றும் மோட்டார் பம்புகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அவசரகால மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக மாநகராட்சியின் 36 படகுகளும், மீன்வளத்துறையின் 256 படகுகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தேங்கும் மழைநீரை வெளியேற்றிடும் வகையில் 650 டீசல் மற்றும் மின்மோட்டார்களும், வாடகை அடிப்படையில் 100 எச்.பி மோட்டார்கள் 500 மற்றும் 100 எச்.பி திறனுக்கும் மேலான மோட்டார்கள் 170 என 670 மோட்டார்கள் என மொத்தம் 1320 மோட்டார் பம்புகள் வடகிழக்குப் பருவமழை காலத்தில் பயன்படுத்தப்பட்டு தேங்கும் மழைநீரை அகற்றிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

215 நிவாரண மையங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டு, அங்கு தங்கவைக்கப்படும் பொதுமக்களுக்கு உணவு வழங்கும் வகையில் 111 மைய சமையல் கூடங்களும் தயார்நிலையில் உள்ளன. அறுந்து விழக்கூடிய நிலையில் உள்ள மின்கம்பிகள், மின்கேபிள்கள் சீரமைக்கும் நடவடிக்கைகள் மற்றும் மின்பெட்டிகளை உயர்த்தி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மழையின் காரணமாக விழும் நிலையில் உள்ள ஆபத்தான மரங்களின் கிளைகள் கத்தரிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளது. 01.01.2026 முதல் 21.09.2026 வரை 60,141 மரங்களின் கிளைகள் கத்தரிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2 ஆம்பிபியன், 3 மினி ஆம்பிபியன், 6 ரொபோடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர் இயந்திரங்கள், 3 ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் இயந்திரங்கள், 7 ரீசைக்ளர் வாகனங்கள், 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திரங்கள், லாரியில் பொருத்தப்பட்ட 10 கிரேன்கள், 5 ஹைட்ராலிக் ஏணிகள், 6 ஜே.சி.பி. இயந்திரங்கள் (Front end Loaders), 7 ஹைட்ராலிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள், 60 ஸ்கிட் ஸ்டீயர் லோடர்கள் (Skid Steer Loader) தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தன்னார்வலர்கள் பதிவுசெய்யும் செயலி உருவாக்கப்பட்டு, தற்போது பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தலைமையிடம் மற்றும் 3 வட்டார அலுவலங்களிலும் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் மூலம் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்களிடமிருந்து குறைகள்/புகார்களைப் பெறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள மாநகராட்சியின் 1913 உதவி எண் கட்டுப்பாட்டு மையம் 24 மணி நேரமும் 7 நாட்களும் செயல்படும். 1913 உதவி எண் மற்றும் ட்விட்டர், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்கள் வாயிலாகப் புகார்கள் பெறப்பட்டு, அவற்றை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**

## GREATER CHENNAI CORPORATION

## NORTH-EAST MONSOON PREPAREDNESS WORKS – 2026

- Desilting works are being carried out in **1,683 km of storm water drains**, of which desilting has been completed in **1,102 km** so far. The works are in progress.
- Desilting works in **1,10,211 silt catch pits** were fully completed in the first phase. In the second phase, desilting has been completed in **65,076 silt catch pits** so far.
- Storm water drain connectivity works have been taken up at **105 missing locations covering 922 metres**. Works have been completed at **37 locations**, while works are in progress at **68 locations**.
- To facilitate the smooth flow of storm water desilting and removal of water hyacinth have been carried out in **44 waterways maintained by the Greater Chennai Corporation**, **13 canals maintained by the Water Resources Department**, and also in the **Cooum, Adyar and Buckingham Canal**.
- Desilting works have been taken up in the drains passing through **28 Railway minor bridges**, of which desilting has been completed in **6 drains** so far.
- Improvement works have been taken up for **8,439 metres** in the **Captain Cotton Canal, Secretariat Colony Canal, Otteri Nullah and Virugambakkam Canal**. Improvement works have been completed for **6,977 metres**.
- Improvement works have been taken up in **83 water bodies**. So far, **51 water bodies have been improved**, while works are in progress in **32 water bodies**.
- Motor pumps have been installed and are being monitored in **19 GCC subways** and **5 Highways Department subways** to drain water immediately which accumulated due to rainfall.
- As per the directions of the **Hon'ble Chief Minister of Tamil Nadu**, works are being undertaken by allocating **₹100 crore** as part of North-

East Monsoon preparedness measures in the Greater Chennai Corporation areas.

- **109 water collection tanks equipped with motor pumps** have been kept ready. Construction of **3 additional water collection tanks** is in progress and will be completed by the end of this month.
- Motor pumps for draining rainwater have been kept ready in **low-lying areas prone to waterlogging**.
- For **Emergency rescue and relief operations**, **36 boats of the Greater Chennai Corporation** and **256 boats of the Fisheries Department** have been kept ready.
- To drain accumulated rainwater in the Greater Chennai Corporation area, measures have been taken to deploy a total of 1,320 motor pumps during the Northeast Monsoon season; these include 650 diesel and electric motors, along with 670 motors procured on a rental basis—comprising 500 motors with 100 HP capacity and 170 motors with a capacity exceeding 100 HP.
- **215 relief centres** have been kept ready. In addition, **111 community kitchens** have been kept ready to provide food to the public accommodated at these relief centres.
- Measures are being taken to **repair damaged or vulnerable electrical wires and cables** and to **raise the height of electrical distribution boxes** in vulnerable locations.
- Branches of **dangerous trees that are likely to fall due to rainfall** have been pruned and removed. From **01.01.2026 to 21.09.2026**, branches of **60,141 trees** have been pruned.
- The Greater Chennai Corporation has kept the following machinery ready for emergency and relief operations: **2 amphibious machines, 3 mini amphibious machines, 6 robotic multipurpose excavators, 3 amphibious excavators, 7 recycler vehicles, 15 hydraulic tree-cutting machines, 10 truck-mounted cranes, 5 hydraulic ladders, 6 JCB machines (front-end loaders), 7 hydraulic excavators, and 60 skid-steer loaders**.

- An **Online application has been developed for the registration of volunteers** to undertake relief operations, and the registration process is currently underway.
- Monitoring activities are being carried out through the **Integrated Command and Control Centres (ICCC)** established at the **Headquarters and 3 Regional Offices**.
- The Corporation's **1913 helpline control centre**, established to receive grievances and complaints from the public, functioning **24*7**. Complaints are received through the **1913 helpline and social media platforms such as Twitter, Facebook and Instagram**, and immediate action is being taken to address them.